**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**இரண்டாம் தவணைப் பரீட்சை - 2021**
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 2nd Term Examination - 2021

FWC

**கணக்கீடு**
**Accounting**

| Three Hours 10 min | 33 | T | I,II |
|---|---|---|---|
| Gr -12 (2022) | | | |

**சுட்டெண் :- …………………..**

**அறிவுறுத்தல்கள்:-**
- *01* தொடக்கம் *15* வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- *16* தொடக்கம் *25* வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவும் நான்கு புள்ளிகளைக் கொண்டது.
- உங்கள் சுட்டெண்ணை மேலே கொடுக்கப்பட்டுள்ள உரிய கூட்டினுள் எழுதுக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| *01 - 15* | |
| *16 - 25* | |
| மொத்தம் | |

## பகுதி I

*01.* பின்வருவனவற்றுள் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

1) நிதிக் கணக்கீட்டில் வரலாற்று, எதிர்வு கூறல் தகவல்கள் பயன்படுத்தப்படும்.
2) முகாமைக் கணக்கீட்டின் மூலம் உள்ள, வெளியகப் பிரிவினருக்கு தகவல்கள் முன்வைக்கப்படும்.
3) நிதிக் கணக்கீடானது கணக்கீட்டு எண்ணக்கருக்கள், சட்ட திட்டங்கள், மரபுகள், கணக்கீட்டு நியமங்கள் போன்றவற்றுக்கு அமைவானது.
4) நிதிக் கணக்கீட்டில் ஓர் கணக்காண்டு காலத்திற்கான தகவல்கள் முகாமைக்கு தேவையான சர்ந்தர்ப்பங்களின்போது முன் வைக்கப்படலாம்.
5) முகாமைக் கணக்கீட்டில் வரலாற்றுத் தகவல்கள் மாத்திரம் பயன்படுத்தப்படும்.

(………..)

*02.* பின்வருவனவற்றுள் எவற்றை கணக்கீட்டு வெளியீடாக கருதமுடியும்.

A. மூல ஏடுகள்
B. வருமானக் கூற்று
C. பேரேடுகள்
D. நிதி நிலைமைக் கூற்று
E. உரிமை மாற்றக்கூற்று
F. பரீட்சை மீதி
G. காசுப் பாய்ச்சற்கூற்று
H. பொதுத் தினசேரி
I. கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புக்களும்
J. கட்டுப்பாட்டுக் கணக்குகள்

1) A,B,D,F,J 2) B,D,E,F,I 3) C,D,F,G,I 4) B,D,E,G,I 5) A,C,F,H,I

(………..)

**பின்வரும் தகவல்களைக் கருத்திற்கொண்டு 3ம்,4ம்,5ம்,6ம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

பகீரதன் என்பவர் மோட்டார் வாகன உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் நிறுவனமொன்றினை *01.01.2021* இல் ஆரம்பித்தார்.

| திகதி | கொடுக்கல் வாங்கல் விபரம் | பெறுமதி (000ரூபாவில்) |
|---|---|---|
| *02.01.2021* | இடப்பட்ட காசு மூலதனம் | *3000* |
| *05.01.2021* | காசுக்கு உதிரிப்பாகங்கள் கொள்வனவு | *300* |
| *10.01.2021* | கடனுக்கு உதிரிப் பாகங்கள் கொள்வனவு (பட்டியல் விலையில்) வியாபாரக் கழிவு 10% | *400* |
| *12.01.2021* | குறைபாடுகள் காரணமாக கடனுக்கு கொள்வனவு செய்யப் பட்ட உதிரிப் பாகங்களில் ஒரு பகுதி திருப்பி அனுப்பப் பட்டது. (கொள்விலையில்) | *30* |
| *15.01.2021* | 10% வட்டியில் வங்கிக் கடன் ஒன்று பெறப்பட்டிருந்தது | *240* |
| *30.01.2021* | கடனுக்கு விற்பனை (இதில் 8%VAT உள்ளடக்கப்பட்டுள்ளது) | *324* |

குறிப்பு:- இம்மாதத்தில் விற்பனை செய்யப்பட்ட உதிரிப் பாகங்களின் கிரயம் ரூபா *200,000* ஆகும். கொள்வனவுகள் செலவினங்கள் மீது VAT இல்லை என கருதுக.

*03. 05,10,12,30*ம் திகதிகளில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்குத் தேவையான மூல ஆவணங்களின் ஒழுங்கு வரிசை யாது?

1) பற்றுச்சீட்டு, பட்டியல், வரவுத்தாள், கொடுப்பனவு உறுதிச்சீட்டு.
2) கொடுப்பனவு உறுதிச்சீட்டு, பட்டியல், செலவுத்தாள், பட்டியல்
3) கொடுப்பனவு உறுதிச்சீட்டு, பட்டியல், வரவுத்தாள், பட்டியல்
4) பற்றுச்சீட்டு, பட்டியல், செலவுத்தாள். கொடுப்பனவு உறுதிச்சீட்டு
5) கொடுப்பனவு உறுதிச்சீட்டு, பட்டியல், செலவுத்தாள், பற்றுச்சீட்டு

(………..)

*04. 31.01.2021* இல் முடிவடைந்த மாதத்திற்கான மொத்த இலாபம் தேறிய இலாபம் முறையே மொத்த

மொத்த இலாபம் (000ரூபாவில்) தேறிய இலாபம் (000ரூபாவில்)

| | | |
|---|---|---|
| 1) | 100 | 80 |
| 2) | 160 | 140 |
| 3) | 160 | 80 |
| 4) | 100 | 99 |
| 5) | 160 | 98 |

(………..)

05. மேற்படி வணிகம் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கினை பராமரிக்குமாயின் 30ம் திகதி கொடுக்கல் வாங்கலுக்குரிய சரியான இரட்டைப் பதிவு

| | வரவு (000ரூபாவில்) | செலவு (000ரூபாவில்) |
|---|---|---|
| 01. கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் க/கு<br>விற்பனைக் கணக்கு | 324 | 324 |
| 02. கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் க/கு<br>VAT கட்டுப்பாட்டுக் க/கு<br>விற்பனைக் கணக்கு | 300<br>24 | <br><br>324 |
| 03. கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் க/கு<br>விற்பனைக் கணக்கு<br>VAT கட்டுப்பாட்டுக் க/கு | 324 | <br>300<br>24 |
| 04. கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் க/கு<br>விற்பனைக் கணக்கு<br>VAT கட்டுப்பாட்டுக் க/கு | 324 | <br>283<br>41 |
| 05. கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் க/கு<br>VAT செலவுக் க/கு<br>விற்பனைக் க/கு<br>VAT கட்டுப்பாட்டுக் க/கு | 300<br>24 | <br><br>300<br>2441 |

(………..)

06. 31.01.2021 இல் உள்ளவாறான நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதியும் நடைமுறைப் பொறுப்புக்களின் பெறுமதியும்.

| நடைமுறைச் சொத்துக்கள் "000" ரூபாவில் | நடைமுறைப் பொறுப்புக்கள் "000" ரூபாவில் |
|---|---|
| 1) 3694 | 355 |
| 2) 3264 | 330 |
| 3) 3694 | 330 |
| 4) 3264 | 355 |
| 5) 754 | 331 |

(………..)

07. ராகவன் கம்பனி 31 மார்ச் 2021 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபமாக ரூபா 650000ஐக் கொண்டிருந்தது பின்வரும் வழுக்களை கருத்திற் கொள்ளாமல் மேற்படி இலாபம் கணிக்கப்பட்டுள்ளது.

கொடுத்த கழிவு ரூபா 10000 பெற்ற கழிவுக் கணக்கில் வரவில் பதியப்பட்டுள்ளது.

பெறுமதி சேர்வரி ரூபா 16000ஐ உள்ளடக்கிய விற்பனைத் தொகை ரூபா 216000 விற்பனைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழுக்களைத் திருத்திய பின்னர் இலாபமாக அமைவது,

1) ரூபா 670000 2) ரூபா 660000 3) ரூபா 634000 4) ரூபா 666000 5) ரூபா 686000

(………..)

08. 31 மார்ச் 2020 இல் நிறுவனமொன்றின் மொத்தச் சொத்துக்கள் ரூபா 520000 மொத்தப் பொறுப்புக்கள் 270000, 31 மார்ச் 2021 இல் முடிவடைந்த ஆண்டுக் காலப்பகுதியில் தேறிய சொத்துக்களில் ஏற்பட்ட குறைவு ரூபா 20000 ஆகும். 31 மார்ச் 2021 இல் உரிமையாண்மைத் தொகை யாது?

1) ரூபா 500000 2) ரூபா 250000 3) ரூபா 270000 4) ரூபா 230000 5) ரூபா 290000

(………..)

09. 01.03.2020 இல் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தொலைத் தொடர்புக் கம்பனி ஒன்று வாடிக்கையாளருக்கு இணைப்பினை வழங்கும்போது 3 மாத கட்டணங்களை முற்பணமாக பெறுகின்றது, மாதாந்த கட்டணம் ரூபா 300 ஆகும்.

| | மார்ச் | ஏப்ரல் | மே |
|---|---|---|---|
| இணைப்பிணைப் பெற்றுக் கொண்டவர்கள் | 100 | 80 | 120 |

30.05.2020 இல் முடிவடைந்த காலண்டுப் பகுதிக்காக வருமானமாக இனங்காண வேண்டிய தொகையும், முற்பண வருமானமும் முறையே,

| காலப்பகுதிக்கான வருமானம் (ரூபாவில்) | 30.06.2020 இல் முற்பண வருமானம் (ரூபாவில்) |
|---|---|
| 1. 174000 | 96000 |
| 2. 96000 | 174000 |
| 3. 60000 | 36000 |
| 4. 120000 | 96000 |
| 5. 120000 | 174000 |

(………..)

10. 31.03.2021 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 700000
31.03.2021 இல் மொத்த கடன்பட்டோர் பேரேட்டு மீதி ரூபா 721000
இவ்வேறுபாட்டிற்கான காரணங்களை ஆராய்ந்தபோது தவறுகளும் விடுபாடுகளும் கண்டறியப்பட்டன.

A – விற்பனை நாளேட்டின் மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 16000 குறைவாக கூட்டப்பட்டது.

B – மீளப்பெற்ற அறவிடமுடியாக் கடன் ரூபா 5000 தொடர்பில் காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு வைக்கப்பட்டு கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் க/கு செலவு வைக்கப்பட்டதை தவிர வேறு எப்பதிவுகளும் செய்யப்படவில்லை. (ராகவன் கணக்கிலும் இது தொடர்பில் பதிவுகள் செய்யப்படவில்லை)

31.03.2021 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் சரியான மீதி யாது?

1) ரூபா 716000 2) ரூபா 721000 3) ரூபா 705000 4) 689000 5) ரூபா 726000

(………..)

11. வரலாற்றுக் கிரய எண்ணக் கருவானது பொதுவிலை மட்டம் அதிகரிக்கும் காலங்களில்.

1) சொத்துப் பெறுமதிகளிலும் இலாபத்திலும் எதுவித தாக்கத்தையும் காட்டுவதில்லை.
2) சொத்துப் பெறுமதியை உயர்வாகவும், இலாபத்தை குறைவாகவும் காட்டுகின்றன.
3) சொத்துப் பெறுமதியையும் இலாபத்தையும் உயர்வாக காட்டுகின்றன.
4) சொத்துப் பெறுமதியைக் குறைவாகவும் இலாபத்தை உயர்வாகவும் காட்டுகின்றன.
5) சொத்துப் பெறுமதியையும், இலாபத்தையும் குறைவாக காட்டுகின்றன. (………..)

12. 2021.01.01 இல் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமொன்றின் வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் வருமாறு,

| | |
|---|---|
| 2021.12.31 இல் இருப்புக்கள் கிரயத்தில் | 6500 |
| கொள்வனவுகள் | 50000 |
| வட்டிச் செலவுகள் | 1500 |
| விற்பனைகள் | 74000 |
| பெற்ற பங்கிலாபம் | 10000 |
| செயற்பாட்டுச் செலவுகள் (பெறுமானத் தேய்வு ரூபா 2000 உட்பட) | 5000 |

மேலதி தகவல்: 2021.12.31 இல் இருப்புக்களின் தேறிய தேறத்தக்க பெறுமதி ரூபா 6000 ஆகும். 2021.12.31 இல் முடிவடைந்த காலப் பகுதிக்காக இனங் காணப்படவேண்டிய மொத்த வருமானம், மொத்தச் செலவு யாது?

| மொத்த வருமானம் | மொத்தச் செலவினங்கள் |
|---|---|
| 1. 74000 | 55000 |
| 2. 60000 | 84000 |
| 3. 84000 | 58000 |
| 4. 84000 | 50500 |
| 5. 74000 | 58500 |

13. பின்வரும் கணக்கீட்டு எண்ணக்கருக்களில் எது நிதிக்கூற்றுக்களில் கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோரை இனங் காண்பதற்கான அடிப்படையினை வழங்குகின்றது?
1) அட்டுறு எண்ணக்கரு 2) அலசார் எண்ணக்கரு 3) இணைத்தல் எண்ணக்கரு
4) தேறல் எண்ணக்கரு 5) பாதுகாப்பு எண்ணக்கரு (………..)

14. நிறுவனமொன்றின் ஏடுகளைப் பரிசீலனை செய்தபொழுது பின்வரும் தவறுகளும் விடுபாடுகளும் கண்டறியப்பட்டன.

- வங்கி வைப்பொன்றில் இருந்து கிடைத்த வட்டி வருமானம் ரூபா 12000 வட்டிச் செலவுகள் கணக்கில் வரவுவைக்கப்பட்டிருந்தது.
- காசுப் பெறுவனவு நாளேட்டின் கழிவு நிரலின் கூட்டுத்தொகை ரூபா 2000 பெற்ற கழிவுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது மற்றைய பதிவு சரியாக செய்யப்பட்டது.

மேற்படி தவறினால் தோன்றிய தொங்கல் மீதி யாது?
1) செலவு ரூபா 28000 2) வரவு ரூபா 14000 3) வரவு ரூபா 20000
4) செலவு ரூபா 14000 5) செலவு ரூபா 20000 (………..)

15. 2021.03.31 இல் மொத்தச் சொத்துக்கள் ரூபா 240000 மொத்தப் பொறுப்புக்கள் ரூபா 110000 2021.04.01 இல் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கால்கள்வருமாறு

- ரூபா 20000 கொள் விலையான பொருட்கள் ரூபா 35000இற்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது.
- அடுத்த மாத விற்பனை தொடர்பில் கிடைத்த விற்பனை முற்பணத் தொகை ரூபா 80000

- மார்ச் மாத மின்கட்டணம் ரூபா 3000 செலுத்தப்பட்டது.

மேற்படி கொடுக்கல் வாங்கலின் பின்னர் கணக்கீட்டுச் சமன்பாடு

| | சொத்துக்கள் | = | உரிமையாண்மை | + | பெறுப்புக்கள் |
|---|---|---|---|---|---|
| 1) | 240000 | = | 130000 | + | 110000 |
| 2) | 332000 | = | 145000 | + | 187000 |
| 3) | 332000 | = | 142000 | + | 190000 |
| 4) | 335000 | = | 145000 | + | 190000 |
| 5) | 255000 | = | 145000 | + | 110000 |

(………..)

16. நிறுவனமொன்றில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் சில கணக்குகள் கீழே தரப்படுகின்றன அதன் கணக்கு வகையினைக் குறிப்பிடுக.

| | கணக்குகள் | கணக்கு வகை |
|---|---|---|
| 1) | ஐயக்கடன் ஒதுக்கீடு | ……………………………………… |
| 2) | உட்திரும்பல் | ……………………………………… |
| 3) | பெறுமானத்தேய்வு ஏற்பாடு | ……………………………………… |
| 4) | ஊழியர் கடன் | ……………………………………… |

வினா இலக்கம் 17,18 போன்றவற்றிற்கு விடையளிப்பதற்கு கீழ்வரும் தகவல்களைப் பயன்படுத்துக..

வரையறுத்த சகானா பொதுக் கம்பனியின் 2020 யூன் 30 இத்தயாரித்த கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு இணக்கக் கூற்று வருமாறு,

| கொடுக்கல் வாங்கல் இலக்கம் | கொடுக்கல் வாங்கல் விபரம் | "000" ரூபாவில் |
|---|---|---|
| | 2020.06.30 இல் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி (திருத்த முன்) | 674 |
| 1 | காசுக் கொடுப்பனவு நாளேட்டின் கழிவு நிரல் குறைத்துக் கூட்டப்பட்டது. | (5) |
| 2 | காசுக் கொடுப்பனவு நாளேட்டில் நடைமுறையல்லாச் சொத்துக் கொள்வனவிற்கு வரையப்பட்ட காசோலை தவறுதலாக கடன்கொடுத்தோர் பகுப்பாய்வு நிரலில் இடப்பட்டிருந்தது. | 25 |
| 3 | குமார் திருப்பியனுப்பியது குமாரது தனிப்பட்ட கணக்கில் பதிவு செய்யப்படவில்லை. | 10 |
| | 2020.06.30 இல் கடன்கொடுத்தோர் பேரேட்டு மீதி (திருத்தமுன்) | 704 |

**குறிப்பு:-** கொள்வனவு நாளேட்டில் சிமித்திடம் கொள்வனவு ரூபா 5000 இரு தடவைகள் பதிவு செய்யப்பட்டிருந்தது.

17. 2020.06.30 இல் திருத்திய கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி?............................................

18. கொடுக்கல் வாங்கல் இலக்கம் 02 இனை திருத்தம் செய்வதற்கான பொது நாட்குறிப்பு பதிவினைத் தருக.

…………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………..

19. வணிக நிறுவனமொன்றின் 2020 ஏப்ரல் 01 இல் சிறுசெலவுக் காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 1320 ஆக காணப்பட்டது. 2020 மார்ச் மாத சில்லறைச் செலவுகளின் மொத்தம் ரூபா 1780 ஆகும். 2020 ஏப்ரல் 01ம் திகதியிலிருந்து கட்டுநிதி ரூபா 500 ஆல் அதிகரிப்புச் செய்யப்பட்டதற் கேற்ப ஏப்ரல் மாதத்தில் மீள் நிரப்பப்படும் தொகை யாது?

…………………………………………………………………………………………………………

வினா இலக்கம் 20.21 ற்கு விடையளிப்பதற்கு கீழ்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

(31.03.2021 இல் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 32000 வரவு மீதியைக் காட்டியது. இம் மீதியுடன் வங்கிக்கூற்று மீதி வேறுபட்டமைக்கான காரணம் மாற்றப்படாத காசோலை ரூபா 20000ம், வசூலிக்கப்படாத காசோலை ரூபா 12000மும் ஆகும்.

| | |
|---|---|
| ஏப்ரல் மாத காசுப் பெறுவனவு நாளேட்டின் மொத்த ரூபா | 140000 |
| ஏப்ரல் மாத காசுக் கொடுப்பனவு நாளேட்டின் மொத்த ரூபா | 105000 |
| ஏப்ரல் மாத வங்கி வசூலித்த காசோலைகளின் பெறுமதி ரூபா | 121000 |
| ஏப்ரல் மாதம் வங்கியில் மாற்றப்பட்ட காசோலைகளின் பெறுமதி | 109000 |
| ஏப்ரல் மாதம் வங்கி அறவிட்ட சேவைக்கட்டணம் ரூபா | 1500 |

20. 2021 ஏப்ரல் மாதம் மாற்றப்படாத, வசூலிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி யாது?

…………………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………………..

21. 2021ஏப்ரல் 30 இல் வங்கிக் கூற்று மீதி யாது?

…………………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………………..

22. விற்பனை அன்றேல் திருப்புக எனும் அடிப்படையில் அனுப்பப்பட்ட 9600 கொள்விலையான இருப்புக்கள் விற்பனையாக கருதப்பட்டு விற்பனைக் கணக்கிலும் கடன்பட்டோர் கணக்கிலும் பதிவு செய்யப்பட்டன. இங்கு பட்டியல் விலையானது விற்பனை விலையில் 20% கூட்டி விலை குறிக்கப் பட்டிருந்தது. எனினும் இப்பொருட்கள் இன்னமும் விற்பனையாகவில்லை என்பதுடன் திருப்பி அனுப்பும் காலஎல்லை இன்னமும் முடிவடையவில்லை. ஆயினும் இருப்பெடுத்தலின்போது மேற்படி இருப்பின் கிரயப் பெறுமதி இறுதி இருப்புடன் சேர்க்கப்பட்டிருந்தது. மேற்படி தவறினைத் திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தருக.

…………………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………………..

❖ ***23ம், 24ம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் அட்டவணையை பயன்படுத்துக.***

| வருமானம் / செலவினம் | 2020.04.01 இல் நிலுவை (ரூபாவில்) | 2021.04.01 இல் நிலுவை (ரூபாவில்) | காசுப்பெறுவனவு/ கொடுப்பனவு (ரூபாவில்) | 2020.04.01 இல் முற்பணம் (ரூபாவில்) | 2021.04.01 இல் முற்பணம் (ரூபாவில்) | இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றியது (ரூபாவில்) |
|---|---|---|---|---|---|---|
| பெற்ற வாடகை | 1500 | 2000 | ? | 500 | 6000 | 12000 |
| மின் கட்டணம் | 2800 | - | 5900 | 100 | 200 | ? |

23. காசாகப் பெற்ற வாடகை வருமானம்?..........................................................................................................

24. இலாப நட்டக் கணக்கில் (வருமானக் கூற்றில்) தாக்கல் செய்யப்பட்ட மின்கட்டனச் செலவீனம்?
…………………………………………………………………………………………………………..

25. ……………………………….. எண்ணக் கருவானது செலவுகள் எக்காலப் பகுதியில் நிகழ் கின்றனவோ அக்காலப் பகுதிக்கான செலவாக அதனைக் கருத்திற் கொள்ளல் வேண்டும். என கூறும் அதேவேளை, செலவுகள் வருமானத்தினை உருவாக்குவதனோடு தொடர்புபடுத்தப்பட்டே இனங் காணப்படுதல் வேண்டுமென ………………………. எண்ணக் கரு வலியுறுத்துகின்றது. இதனடிப்படையில் இவ் இரு எண்ணக்கருக்களும் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றது.

(25x2=50 புள்ளிகள்)

## பகுதி – II

**அறிவுறுத்தல்கள் :-**

- ***1ம், 2ம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.***

01. மாயவன் நிறுவனத்தின் ஏடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட 2021.03.31இல் உள்ளவாறான பரீட்சை மீதி வருமாறு,

| விபரம் | வரவு "000" ரூபாவில் | செலவு "000" ரூபாவில் |
|---|---|---|
| 2020.04.01 இல் இருப்புக்கள் | 100 | |
| காணி கட்டிடம் (காணியின் கிரயம் 1000000) | 1800 | |
| மோட்டார் வாகனம் கிரயத்தில் | 2000 | |
| 2020.01.01 திரண்ட பெறுமானத்தேய்வு | | |
| கட்டிடம் | | 120 |
| மோட்டார் வாகனங்கள் | | 400 |
| கொள்வனவு, விற்பனை | 880 | 2200 |
| வியாபார வருமதியாளர், வியாபார சென்மதியாளர் | 240 | 160 |
| சம்பளம் (தேறியது) | 360 | |
| 8% வங்கிக் கடன் (2021.01.01 இல் பெறப்பட்டது | | 500 |
| வங்கிக் கடன் வட்டி | 8 | |
| காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு | 620 | |
| அனுமதித்த கழிவு, பெற்ற கழிவு | 6 | 8 |
| விளம்பரம் | 12 | |
| காப்புறுதி | 18 | |
| உட்திரும்பல் | 100 | |
| உட்சுமைக்கூலி | 20 | |
| ஐயக்கடன் ஒதுக்கீடு (2020.04.01 இல்) | | 6 |
| EPF செலவுக் கணக்கு | 40 | |
| சென்மதி EPF க/கு | | 40 |
| மூலதனம் | | 2770 |
| | **6204** | **6204** |

மேலதிக தகவல்களும் சீராக்கங்களும் வருமாறு

1) 31.03.2021 இல் இருப்புக்களின் கிரயப்பெறுமதி ரூபா 140000 ஆக இருந்ததுடன், இதன் நிகர தேறத்தக்க பெறுமதி ரூபா 120000 ஆகவும் இருந்தது.
2) மோட்டார் வாகனங்களுக்கு 10%மும், கட்டிடங்களுக்கு 5% மும் நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்விடப்படல் வேண்டும்.
3) அறவிடமுடியாக் கடனாக ரூபா 10000 பதிவளிக்கப்படல் வேண்டும் என்பதுடன் ஐயக்கடனிற்காக வியாபார வருமதியாளர் மீதியில் 5% இற்கும் ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும்.
4) 2021 மார்ச் மாதத்திற்கான வங்கிக்கூற்று ஏப்ரல் 4ம் திகதி கிடைக்கப்பெற்றது வங்கிக்கூற்று மீதிக்கும் காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிக்கும் இடையிலான வேறுபாட்டிற்கு காரணமாக அமைந்த இரண்டு கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு,
   1) வங்கி அறவிட்ட மேலதிகப் பற்று வட்டி ரூபா 5000
   2) வாடிக்கையாளர் நேரடி வைப்பு ரூபா 10000

5) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) ஊழியர் பங்களிப்பு 10%மும், தொழில் தருநர் பங்களிப்பு 15%மும் ஆகும். அத்துடன் ஊழியர் நம்பிக்கை நிதிய (ETF) பங்களிப்பு 3% ஆகும். இவ்வாண்டுக்கான தொழில் தருநர் பங்களிப்பு தொடர்பில் பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை எவ்வாறாயினும் EPF இற்கான ஊழியர் பங்களிப்பு EPF செலவுக் கணக்கு வரவு வைக்கப்பட்டு சென்மதி EPF கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது,**

i) *2021.03.31* இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக்கூற்று

ii) *2021.03.31* இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

*02.* வரதன் என்பவர் இலத்திரனியல் மின் உபகரணங்களைப் பழுது பார்க்கும் மற்றும் அதற்கான உதிரிப் பாகங்களை விற்பனை செய்யும் நிறுவனமொன்றினை நடாத்தி வருகின்றார். *01.04.2020* இல் அவரது வியாபாரத்தில் காணப்பட்ட மீதிகள் வருமாறு,

| | |
|---|---|
| திருத்த வேலை உபகரணங்கள் | ரூபா *150000* |
| உதிரிப்பாக இருப்பு | ரூபா *50000* |
| வியாபார வருமதியாளர் | ரூபா *25000* |
| வங்கிக்கடன் | ரூபா *100000* |
| நிலுவைச் செலவினம் | ரூபா *25000* |
| காசு | ரூபா *100000* |

| **திகதி** | **கொடுக்கல் வாங்கல்** | **பெறுமதி ரூபாவில்** |
|---|---|---|
| *2020.04.01* | திருத்த வேலை உபகரணங்கள் காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. | 50000/= |
| *2020.04.05* | பழுது பார்த்தல்கள் மூலம் கிடைத்த வருமானம் (இதற்காகப் பயன்படுத்தப்பட்ட உதிரிப்பாகங்களின் பெறுமதி ரூபா *10000*) | 50000/= |
| *2020.04.10* | உதிரிப் பாகங்கள் காசுக்கு கொள்வனவு | 30000/= |
| *2020.04.12* | உரிமையாளர் மேலதிகமாக காசாக இட்ட மூலதனம் | 50000/= |
| *2020.04.15* | கடந்த மாதங்களிற்கான மின் கட்டணம் செலுத்தியது | 1500/= |
| *2020.04.18* | வரதனது வீட்டு உபகரணம் ஒன்றை பழுது பார்த்தனமக்காக பயன்படுத்தப்பட்ட உதிரிப் பாகங்களின் பெறுமதி | 15000/= |
| *2020.04.20* | உதிரிப் பாகங்கள் காசுக்கு விற்பனை (இதனது கொள்விலை ரூபா *20000*) | 25000/= |
| *2020.04.25* | பழுதுபார்த்தல் வேலைகளை மேற்கொண்டதன் மூலம்பெறவேண்டியவருமானம் (இதற்காகப் பயன்படுத்தப்பட்ட உதிரிப்பாகங்களின் பெறுமதி ரூபா *20000*) | 60000/= |
| *2020.04.28* | பழுதுபார்த்தல் வேலைகளை மேற்கொண்ட ஊழியருக்கு வழங்கப்பட்ட சம்பளம் (இச்சம்பளத்தினுள் ரூபா *2000* வரதனது வீட்டு உபகரணத்தை பழுது பார்த்தமைக்காக ஏற்பட்டதாகும்) | 40000/= |
| *2020.04.30* | மாதாந்த வங்கிக் கடன் தவணைக் கட்டணம் செலுத்தப்பட்டது. (இதனுள் உள்ளடங்கியுள்ள வட்டித் தொகை ரூபா *600* ஆகும்) | 10500/= |
| *2020.04.30* | மின்சாரப் பட்டியல் கிடைக்கப்பெற்றது. | |

| *ஏப்ரல் - 2020* | | |
|---|---|---|
| | | *மின் க/கு இலக்கம்: 01134446* |
| முன்னைய நிலுவை | + கடந்தபட்டியல் | |
| 250 | + 1400 | = 1650.00 |
| *15.04.2020* கொடுப்பனவு | | 1500.00 |
| இத்தினம் வரையிலான நிலுவை | | 150.00 |
| இம்மாத விதிப்பனவு (90x15) | | 1350.00 |
| | | 1500.00 |

**வேண்டப்படுவது,**

அ) கீழ்வரும் சமன்பாட்டில் மேற்படி கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தை கூடுமாயின் + எனவும், குறையுமாயின் - எனவும் பெறுமதிகளுக்கெதிரே குறிப்பிடுக.

| திகதி | திருத்தவேலை உபகரணம் | + | உதிரிப்பாக இருப்பு | + | வியாபார வருமதியாளர் | + | காசு | = | உரிமை | + | வங்கிக் கடன் | + | நிலுவை செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

ஆ) தேறிய சொத்து அடிப்படையில் வியாபார அமைப்பின் இலாபம் or நட்டத்தினைக் கணிப்பிடு க.

*(20 புள்ளிகள்)*

03. 30.06.2020 இல் பெறுமதி சேர் வரிக்கு பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றின் ஏடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட பரீட்சை மீதி வருமாறு,

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 37000 | |
| விற்பனை | | 273600 |
| கடன்பட்டோர் | 80000 | |
| கடன்கொடுத்தோர் | | 70000 |
| VAT சென்மதி | | 34000 |
| கொள்வனவு | 150000 | |
| ஏனைய வருமானம் | | 30000 |
| பெற்ற கழிவு | | 6000 |
| ஆதனம் பொறித் தொகுதி | 400000 | |
| மூலதன க/கு | | 175000 |
| தொங்கல் | | 78400 |
| | **667000** | **667000** |

தொங்கல் ஏற்பட்டமைக்கான காரணங்களை ஆராய்ந்தபோது பின்வரும் தவறுகளும், விடுபாடுகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

i) காசுப் பெறுவளவு நாளேட்டின் கழிவு நிரலின் கூட்டுத்தொகை ரூபா 2000 உரிய கணக்கு களுக்கு மாற்றப்படவில்லை.

ii) காசுக்கு விற்பனை ரூபா 40000 காசுப் பெறுவனவு நாளேட்டில் பதிவு செய்யப்பட்டு கடன்பட்டோரிடம் பெற்றது எனும் பகுப்பாய்வு நிரலில் இடப்பட்டிருந்தது.

iii) உரிமையாளர் மேலதிகமாக காசாக இட்ட மூலதனம் ரூபா 30000 காசுப் பெறுவனவு நாளேட்டில் பதிவுசெய்யப்பட்டு வருமானங்கள் எனும் பகுப்பாய்வு நிரலில் இடப்பட்டு ஏனைய வருமானமாக இனங்காணப்பட்டது.

iv) கொள்வனவு நாளேட்டின் VAT நிரலின் மொத்தம் ரூபா 1800 VAT கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

v) ரூபா 3000 கழிவுக்குட்படுத்தி கடன் கொடுத்தோருக்கு வரையப்பட்ட காசோலை ரூபா 42000 மறுக்கப்பட்டமை தொடர்பில் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

vi) ஆதனம் பொறித்தொரு உபகரணக் கணக்கின் சரியான மீதி ரூபா 360000 பரீட்சை மீதியில் ரூபா 400000 ஆக நிரற்படுத்தப்பட்டிருந்தது.

vii) ஆரம்ப இருப்புக் கணக்கின் மீதி ரூபா 20000 குறைத்துப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது.**

அ) திருத்தங்களை பதிவு செய்வதற்கான நாட்குறிப்பு பதிவுகள்

ஆ) தொங்கல் கணக்கு

இ) திருத்திய பின்னர் பரீட்சை மீதி

*(20 புள்ளிகள்)*

04. *01.09.2020* இல் நிறுவனமொன்றின் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா *230000* ஆகக் காணப்பட்டது. *30* செப்டொம்பர் *2020* இல் முடிவடைந்த ஒரு மாத காலப் பகுதியில் நிறுவனத்தின் முதன்மை ஏடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட விபரங்கள் வருமாறு,

| | "*000*" ரூபாவில் |
|---|---|
| விற்பனை நாளேட்டின் மொத்தம் | 1500 |
| உட்திரும்பநாளேட்டின் மொத்தம் | 100 |
| காசுப் பெறுவனவு நாளேட்டின் கொடுத்த கழிவு நிரல் | 300 |
| கடன்பட்டோரிடம் பெற்றது | 1000 |

| | |
|---|---|
| பொதுத் தினசேரியில் பதிவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் | |
| அறவிடமுடியாக் கடன் | *4* |
| காலந்தாழ்த்திய கடனுக்கு விதித்த வட்டி | *5* |
| எதிர்த்தீர்தல்கள் | *200* |

*30.09.2020* இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் க/கு மீதியும் கடன்பட்டோர் பேரேட்டு மீதிகளின் கூட்டுத்தொகையும் ஒன்றுடன் ஒன்று இணங்கவில்லை. பிற்பட்ட பரிசோதனை பின்வரும் தவறுகளையும் விடுபாடுகளையும் வெளிக்காட்டியது.

1) அறவிடமுடியாக்கடன் ரூபா *4000* கடன்பட்டோரின் தனிப்பட்ட கணக்கில் ரூபா *400* என பதிவுசெய்யப்பட்டிருந்தது.
2) விற்பனை நாளேடு தவறுதலாக 100000/= குறைத்துக் கூட்டப்பட்டிருந்தது.
3) கடன்பட்டோரான நந்தனுக்கு அனுப்பிய செலவுத்தாள் ரூபா 50000/= நாளேட்டில் *5000* என பதிவு செய்யப்பட்டிருந்தது.
4) கடன்பட்டோர் ஒருவரிடம் இருந்து பெற்ற ரூபா *20000* காசோலை மறுக்கப்பட்டது எனினும் குறிப்பிட்ட காலப் பகுதியில் அவரிடமிருந்து புதிய காசோலை பெறப்பட்டு காசுப் பெறுவனவு நாளேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது எனினும் மறுக்கப்பட்ட காசோலை தொடர்பாக எதுவித பதிவுகளும் ஏடுகளில் மேற்கொள்ளப்படவில்லை.
5) கடன்பட்டோருக்கு மீளச் செலுத்திய ரூபா *10000* காசுக் கொடுப்பனவு நாளேட்டில் பதிவு செய்யப்பட்டு ஏனைய கொடுப்பனவு நிரலில் இடப்பட்டிருந்தபோதும் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவுகள் இடம்பெறவில்லை.

**வேண்டப்படுவது,**

அ) திருத்தமுன் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு

ஆ) திருத்திய கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கு

இ) வழுக்களைத் திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகள்

(20 புள்ளிகள்)

05. அ) விசாகன் ஓர் ஓய்வுபெற்ற அரச ஊழியர் ஆவார். அவர் 01.02.2020இல் தனது வீட்டின் ஓர் பகுதியில் தளபாட விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பித்தார். தான் சேவையில் இருந்தபொழுது பயன்படுத்திய வங்கி நடைமுறைக்கணக்கினை இவ்வியாபார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த முடிவு செய்தார். எனினும் மாதாந்த ஓய்வூதியம் இக்கணக்கிற்கே மாற்றப்படுகின்றது. விசாகனின் குறிப்பு புத்தகத்தில் உள்ளபடி வங்கி மீதியாக ரூபா 400000 காணப்பட்டது.

**பெப்ரவரி 2020 கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு**

| **திகதி** | **விபரம்** | **பெறுமதி** |
|---|---|---|
| 04.02.2020 | தளபாடக் கொள்வனவிற்காக வரைந்த காசோலை (காசோலை இலக்கம் 10155) | 300000 |
| 05.02.2020 | ரூபா 50000 பெறுமதியான தளபாடங்கள் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது | 75000 |
| 10.02.2020 | ரூபா 25000/= கொவிலையான தளபாட விற்பனை மூலம் கிடைத்தவை (காசோலை இலக்கம் 0738) | 40000 |
| 15.02.2020 | வியாபாரத் தேவைக்காக வங்கியில் பெற்ற கடன் (வட்டி வீதம் 12%) | 300000 |
| 18.02.2020 | கொள்வனவிற்காக வரைந்த காசோலை (காசோலை இலக்கம் 10156) | 100000 |
| 19.02.2020 | சம்பளக் கொடுப்பனவிற்கு வரைந்த காசோலை (காசோலை இலக்கம் 10157) | 26000 |
| 26.02.2020 | ரூபா 100000 கொள் விலையான தளபாடங்கள் விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த காசோலை (காசோலை இலக்கம்5368) | 135000 |

**காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| ஏனைய பெறுவனவு | 700000 | கொள்வனவு | 400000 |
| விற்பனை | 175000 | செலவுகள் | 26000 |
| | | மீதி/ சென் | 449000 |
| | **875000** | | **875000** |

| ஏனைய பெறுவனவு விபரம் | |
|---|---|
| மூலதனம் | 400000 |
| வங்கிக் கடன் | 300000 |
| | **700000** |

*2020 பெப்ரவரி மாதத்திற்கென வங்கியால் அனுப்பப்பட்ட வங்கிக் கூற்று*

| **திகதி** | **விபரம்** | **வரவு** | **செலவு** | **மீதி** |
|---|---|---|---|---|
| *01.02.2020* | மீதி | | | *410000* |
| *02.02.2020* | *10154* | *10000* | | *400000* |
| *06.02.2020* | *10155* | *300000* | | *100000* |
| *12.02.2020* | *0738* | | *40000* | *140000* |
| *15.02.2020* | வங்கிக் கடன் | | *300000* | *440000* |
| *20.02.2020* | *10156* | *100000* | | *340000* |
| *27.02.2020* | ஓய்வூதியம் | | *60000* | *400000* |
| *28.02.2020* | வங்கிச் சேவைக் கட்டணம் | *1000* | | *399000* |

**குறிப்பு:** *10154ம் இலக்க காசோலையானது 2020 ஜனவரி மாதம் விசாகன் தனது ஆயுட் காப்புறுதிக் கட்டணத்திற்காக வரைந்த காசோலையாகும்.*

**வேண்டப்படுவது.**

i) திருத்திய காசுக் கட்டுப்பாட்டுக்கணக்கு

ii) *2020 பெப்ரவரி மாத்திற்கான வங்கிக் கணக்கிணக்க கூற்று*

ஆ) மேற்படி கொடுக்கல் வாங்கல்களை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் அட்டவணையை பூர்த்தி செய்க.

| **கொடுக்கல் வாங்கல் விபரம்** | **பின்பற்றப்பட்ட அல்லது மீறப்பட்ட கணக்கீட்டு எண்ணிக்கரு** | **சீராக்கல் பதிவு** |
|---|---|---|
| *1) 4.02.2020இல் கொள்வனவு செய்யப் பட்ட தளபாடங்களில் ஆரைவாசி நிறுவனத்தின் பாவனைக்கானதாகும். இது தொடர்பில் சீராக்கம் செய்யப்படவில்லை.* | | |
| *2) கிடைத்த ஓய்வூதியம் நிறுவனத்தின் மேலதிக மூலதன இனங்காணப் பட்டது.* | | |
| *3) வங்கிக்கடன் வட்டி காலப்பகுதியில் செலுத்தப்படாமையினால் வட்டியை ஓர் செலவினமாக கருதவில்லை.* | | |

06. அ) வரையறுத்த சுந்தரம் கம்பனியானது பெறுமதிசேர் வரிக்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். பின்வரும் மீதிகள் 31.03.2021 இல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்றில் இருந்து பிரித்தெடுத்த மீதிகளாகும்.

| | |
|---|---|
| காசு | 260000 |
| வியாபார சென்மதியாளர் | 80000 |
| சென்மதி VAT | 40000 |
| வியாபார வருமதியாளர் | 100000 |
| ஆதனம் பொறித்தொகுதி உபகரணம் | 150000 |

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் 2021 ஏப்ரல் மாதம் இடம்பெற்றவையாகும்.

| திகதி | கொடுக்கல் வாங்கல் | பெறுமதி |
|---|---|---|
| 04.04.2021 | வரையறுத்த மங்களம் கம்பனியிடம் இருந்து கடனுக்கு பொருட்கள் கொள்வனவு | 270000 |
| 08.04.2021 | காசிற்கு பொருட்கள் விற்பனை | 172800 |
| 10.04.2021 | 31.03.2021இல் நிலுவையில் உள்ள வருமதியாளர் தொகையின் முழுத்தொகையும் கழிவுக்குட்பட்டு பெறப்பட்ட தொகை | 95000 |
| 15.04.2020 | செந்தூரம் கம்பனிக்கு விற்பனை | 216000 |
| 20.04.2021 | ஆரம்ப நிலுவை ரூபா 40000 உட்பட்ட வரையறுத்த மங்களம் கம்பனிக்கு செலுத்த வேண்டிய தொகை முழுவதும் ரூபா 8000 கழிவு பெறப்பட்டு தீர்க்கப்பட்டது. | - |
| 22.04.2021 | காசுக்கு பொருட்கள் கொள்வனவு | 108000 |
| 24.04.2021 | 15.04.2021 விற்பனை தொடர்பாக செந்தூரம் கம்பனியிடம் இருந்து கிடைக்க வேண்டிய முழுத்தொகையும் ரூபா 12000 கழிவுக்குட்பட்டு பெறப்பட்டது. | - |
| 25.04.2021 | காசுக்கு கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் | 162000 |
| 30.04.2021 | காசாக செலுத்திய VAT (உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு | 8000 |

குறிப்பு:- அனைத்து காசு, கடன் கொள்வனவு விற்பனைப் பெறுமதிகளினுள் (நடைமுறையல்லாச் சொத்துக் கொள்வனவு உட்பட) 8% VAT வரி சேர்த்துள்ளது.

**வேண்டப்படுவது,**

1) காசுப் பெறுவனவு, கொடுப்பனவு நாளேடுகள்
2) விற்பனை, கொள்வனவு நாளேடுகள்
3) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு
4) கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு
5) VAT கட்டுப்பாட்டுக் கணக்கு
6) ஆதனம் பொறித்தொகுதி உபகரண கணக்கு
7) கொள்வனவு, விற்பனைக் கணக்கு